**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 447/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 23.02.2026.**

| | |
|---|---|
| **Name : புகழேந்தி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சேலம் அம்மாபேட்டையில் குடியிருந்து லாரி ஓட்டுநராக வேலை செய்கிறேன். கடந்த 2021ம் வருடம் இரவு நேரத்தில் இரு சக்கர வாகனத்தில் ஒயின் ஷாப் பாட்டில்களை ஏற்றும் போது அடையாளம் தெரியாத நபர் என்னை தள்ளிவிட்டதில் காயம் ஏற்பட்டு மருத்துவமனைக்கு சென்றேன். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை எதிரிகளின் மீது இருந்த சந்தேகத்தின் பேரில் சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 18.01.2021 ம் தேதி இரவு 10 மணிக்கு நான் மற்றும் பூபதி இருவரும் ஒயின் ஷாப்பிற்கு சென்று அங்கு பிராந்தி பாட்டில்களை ஒயின் ஷாப்பிலிருந்து வாங்கி இரு சக்கர வாகனத்தில் ஏற்றினோம் என்றால் இல்லை. அப்போது நான் செல்போனில் வீடியோ எடுத்தேன் என்றால் இல்லை. அவ்வாறு வீடியோ எடுத்ததை மனதில் வைத்துக் கொண்டு எதிரி மற்றும் அவர் நண்பர் சுரேஷ் இருவரும் நானும் பூபதியும் வீட்டிற்கு செல்லும் போது பெரியாண்டிச்சி அம்மன் கோவில் அருகே வேங்கானூர் சாலையில் கெட்ட வார்த்தையால் எதிரிகள் இருவரும் பேசினர் என்றால் இல்லை. அதிகாரிகளுக்கு பணம் கொடுத்து தான் கடத்தி வருகிறேன், எதற்காக அதனை செல்போனில் படம் எடுத்தேன் என்று சொன்னார்களா என்றால் இல்லை. சுரேஷ் என்பவர் கத்தியால் என் வலது பக்க தலையில் வெட்டி ரத்த காயம் ஏற்படுத்தினார் என்றால் இல்லை. பூபதி என்பவர் முருகன் என்பவரை இரும்பு கம்பியால் காது மீது அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றால் இல்லை. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. நானும், எதிரியும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான். தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 447/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 23.02.2026.**

| | |
|---|---|
| **Name : சரவணன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் எருமப்பாளையத்தில் குடியிருந்து லோடுமேனாக வேலை செய்கிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியாது. கடந்த 2021ம் வருடம் இரவு நேரத்தில் இரு சக்கர வாகனத்தில் அ.சா.1 சென்ற போது அடையாளம் தெரியாத நபர் அவரை தள்ளிவிட்டதாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 18.01.2021 ம் தேதி இரவு 10 மணிக்கு அ.சா.1 மற்றும் பூபதி இருவரும் ஒயின் ஷாப்பிற்கு சென்று அங்கு பிராந்தி பாட்டில்களை ஒயின் ஷாப்பிலிருந்து வாங்கி இரு சக்கர வாகனத்தில் ஏற்றினோம் என்றால் இல்லை. அப்போது அ.சா.1 செல்போனில் வீடியோ எடுத்தேன் என்றால் இல்லை. அவ்வாறு வீடியோ எடுத்ததை மனதில் வைத்துக் கொண்டு எதிரி மற்றும் அவர் நண்பர் சுரேஷ் இருவரும் அ.சா.1 ம் பூபதியும் வீட்டிற்கு செல்லும் போது பெரியாண்டிச்சி

அம்மன் கோவில் அருகே வேங்கானூர் சாலையில் கெட்ட வார்த்தையால் எதிரிகள் இருவரும் பேசினர் என்றால் இல்லை. அதிகாரிகளுக்கு பணம் கொடுத்து தான் கடத்தி வருகிறேன், எதற்காக அதனை செல்போனில் படம் எடுத்தேன் என்று சொன்னார்களா என்றால் இல்லை. சுரேஷ் என்பவர் கத்தியால் அ.சா.1 வலது பக்க தலையில் வெட்டி ரத்த காயம் ஏற்படுத்தினார் என்றால் இல்லை. பூபதி என்பவர் முருகன் என்பவரை இரும்பு கம்பியால் காது மீது அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றால் இல்லை. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. சம்பவம் பற்றி கேள்விப்பட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.